

இந்திய கடல்சார் மாநாட்டில் பங்கேற்க மும்பை வருகை தந்த தமிழக அமைச்சர்கள் தண்டாரம்பட்டு எ.வ.வேலு அவர்களையும் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்களையும் மும்பை விமான நிலையத்தில் மும்பை தி.மு.க. பொறுப்புக்குழு தலைவர் ம.சேசுராசு தலைமையில் தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினர்கள் அன்பழகன், பொற்கோ, மாறன் ஆரியசங்காரன், ம.நீதிதுரை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் எஸ்.சாலமோன் ராஜா, வக்கோலா பகுதி செயலாளர் சேலம் மா.சீனிவாசன், தாராவி எம்.ஸ்டீபன் போன்ற ஏராளமானோர் கலந்து கொண்டு சால்வை அணிவித்து வரவேற்றார்கள்.

### சிக்கனம் கடைப்பிடிப்போம்:

# சேமிப்போம்! சிறப்பாக வாழ்வோம்!

## உலக சிக்கன நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி

**சென்னை, அக்.30-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உலக சிக்கன நாள் வாழ்த்துச் செய்தியில் சிக்கனம் கடைப்பிடிப்போம்! சேமிப்போம்! சிறப்பாக வாழ்வோம்! என்று குறிப்பிட்டுள்ளார். அவரது வாழ்த்துச் செய்தி வருமாறு:**

ஆண்டுதோறும் அக்டோபர் திங்கள் 30 ஆம் நாள் சேமிப்பின் அவசியத்தை உணர்த்தும் வகையில் “உலக சிக்கன நாளாக” கொண்டாடப்பட்டு வருகிறது.

வருவாயை உயர்த்தியும், செலவுகளை களைந்தும் திறம்பட வாழவேண்டும் என்பதை அய்யன் திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகப் பொது மறையாம் திருக்குறளில்,

**‘வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை**
**ஆராய்வான் செய்க வினை’**

‘வருமானம் வரக்கூடிய வழிகளை விரிவாக்கி, வளங்களையும் பெருக்கி, இடையூறுகளையும் ஆராய்ந்து நீக்கிட வல்லவனே செயலாற்றும் திறனுடையவன்’ என்று கூறியுள்ளார்.

பண்டைய காலங்களில் மண் உண்டியல் மூலம் சேமிக்கும் பழக்கம் நடைமுறையில் இருந்துள்ளது. பாதுகாப்பற்ற அந்த முறையினின்றும் மாறி இன்று வங்கிகளிலும், அஞ்சலகங்களிலும் சேமிக்கும் வாய்ப்புகள் பெருகியுள்ளன. ஒவ்வொருவரும் தம்முடைய வருவாயில் ஒரு பகுதியைச் சேமிக்க வேண்டும். அத்தகைய சேமிப்பும் பாதுகாப்பானதாக அமைய வேண்டும்.

ஒருவர் சேமிக்கும் தொகையானது முதுமையில் நம்பிக்கையையும், பாதுகாப்பினையும் அளிக்கிறது. சிறுகச் சிறுகச் சேமிப்பதன் மூலம் குடும்பத்திற்குத் தேவைப்படக்கூடிய அவசரச்செலவுகள் குறிப்பாக, உயர்கல்விக்கான செலவு, திருமணச் செலவு, மருத்துவச் செலவு, வீடு கட்டுதல் போன்ற இனங்களில் ஏற்படும் செலவு போன்ற அனைத்தையும் எளிதில் எதிர்கொள்ள முடிகிறது. எனவே, ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து, வரவுக்குள் செலவு செய்து சிக்கனமாக வாழப் பழகிட வேண்டும்.

வாழ்க்கை சிறப்பாக அமைய அனைவரும் சிக்கனமாகச் செலவு செய்து சேமித்திட அருகிலுள்ள அஞ்சலகங்களில் சேமிப்புக் கணக்கை தொடங்கிட வேண்டுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் – சைதை கிழக்கு

# 172 (அ) வட்ட முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.செந்தில் மகள் மணவிழா!

## தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி – துணை மேயர் மு.மகேஷ்குமார் – எம்.எல்.ஏ.க்கள் வாழ்த்துகின்றனர்!

சென்னை, அக்.30-

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்குப் பகுதி 172 அ வட்டக் கழக முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.செந்தில் - சூடாமணி செந்தில் ஆகியோரது மகள் எஸ். சந்தியா (எ) வெண்ணிலா, செய்யாறு வட்டம் முக்கூரைச் சேர்ந்த ஈ.வி. ராஜன் - ராதிகா ஆகியோரது இளைய மகன் ஆர்.ஆகாஷ்குமார் ஆகியோரது திருமணம் 31.10.2025 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு மேல் 7.30 மணிக்குள்ளாக திருமணத்தை சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் - காஞ்சனா சுப்பிரமணியன் ஆகியோர் தலைமையேற்று நடத்தி வைக்கின்றனர்.

முன்னதாக திருமண வரவேற்பு நிகழ்ச்சி இன்று (30-10-2025 வியாழக்கிழமை) மாலை 6.30 மணிக்கு வேளச்சேரி பிரதான சாலையில் உள்ள ராஜலட்சுமி திருமண மண்டபத்தில் துணை மேயர், சைதை மு.மகேஷ்குமார், பகுதிச் செயலாளர்கள் - மண்டலக் குழுத் தலைவர்கள் இரா.துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி, கழக வர்த்தகர் அணி மாநில துணைச் செயலாளர் ஐ.கென்னடி ஆகியோர் முன்னிலையில் பகுதி அவைத் தலைவர் இ.முருகேசன், 172வது வட்டச் செயலாளர் நேருநகர் எஸ். பாட்சா, மாவட்டப் பிரதிநிதிகள் வே.ரமேஷ்குமார், க.உமாபதி, ஜி.யோவான் மற்றும் பா.பிரகாஷ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்வில் முனைவர் தமிழச்சிதங்கபாண்டியன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா, ப.தாயகம் கவி, ஜெ.கருணாநிதி, சென்னை மாநகராட்சி கணக்கு குழுத் தலைவர் க.தனசேகரன் எம்.சி., வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி., பாலவாக்கம் க.சோமு. கவிஞர்,காசிமுத்துமாணிக்கம், பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி, பாலவாக்கம் மு.மனோகரன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் எம்.சி., வாசுகி பாண்டியன், முன்னாள் பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர்,

பகுதிச் செயலாளர்கள்: வே.ஆனந்தம் எம்.சி., விநாயகமூர்த்தி எம்.சி., கே.கண்ணன் எம்.சி., மு.இராசா எம்.சி., பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் எம்.சி., வி.இ.மதியழகன் எம்.சி, கே.ஏழுமலை எம்.சி., என்.சந்திரன் எம்.சி., ப.குணாளன் எம்.சி தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் மின்னல் கந்தப்பன், சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., களக்காடி எல்லப்பன், எம்.கே.ஏழுமலை, எஸ்.அரிகிருஷ்ணன், ஆர்.பாலசுந்தரம், அடையார் பி.ஜெ. பாஸ்கர், தா.மோகன்குமார் எம்.சி, நீலங்காரை வி.எட்டியப்பன், சித்தாலப்பாக்கம் ப.ரவி,

பகுதி கழக நிர்வாகிகள் டி.என். சிவமணி, ஆர்.ராஜ்குமார், மு. ஆரோக்கியம், ஆர்.அருணகிரி, மு.பாக்கியலட்சுமி, சைதை த.சம்பத், சைதை ஆர்.ரமேஷ், வி.பி.ஜானகிராமன், கவிதா கவுதமன், வேளச்சேரி சி. பழனி, எம்.ஏ.சங்கர், பொ. த.எழில்வாணன், மற்றும் கோட்டூர் எஸ்.பிரகாஷ், ஆர். கிருஷ்ணகுமார், சைதை சாதிக், நா.மணிகண்டன், அஞ்சல் என்.ராமன், கோ.பாஸ்கரன், த.ரமேஷ், சி.பரிமேலழகர், கனிமொழி தனசேகரன், நிஷா சையத், த.ஜெதீசன்,

வட்ட கழகச் செயலாளர்கள் நா. ராதாகிருஷ்ணன், எல். ஆரோக்கியராஜ், க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், சைதை ஆ.வரதன், வே.முருகன், சை.மு.சேகர், அட்கோ கமலநாதன், ந.தமிழரசு, எஸ். பி.கோதண்டம், எம்.நாகா, ஆர்.டி.மூர்த்தி, க.பாரதிதாசன், வி.சக்திவேல், எஸ்.முருகவேல், பொ.த.மதிவாணன், ஜி.பி. எஸ்.பாலசதீஷ், கே.என். தாமோதரன், ஆர்.பார்த்தீபன், தே.கோபி,

மாவட்ட பிரதிநிதிகள் டி.வி.நரசிம்மன், ச.சேகர், என். நந்தகோபால், எஸ்.ராதாகிருஷ்ணன், எஸ்.ஜெ.சலாம், எஸ்.ரவி, இரா.சுதாபிரியன், ஏ.மஜித், கோட்டூர் ந.பாபு, மு.மகேஷ்லாரன்ஸ், கே.எம். எஸ்.கணேசன், கழக பேச்சாளர் க.ஒப்பிலாமணி, வி.முத்துவேல், கு.புகழ்வேந்தன், ஜி. கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பொன்.ஜெய்சிங், பால்கார் ஏ.ரவி, ஆர்.ரவி, ஜி.பாபு, ஆர்.எல்.காந்தன், த.மணி, ஆர். நாகராஜன், கே.ஆர்.பி. பாண்டியன், வி.பார்த்தசாரதி, சி. முருகன், சி.சூர்யா மணிவண்ணன், வி.ஜி.மோகன், , வி.விவேக், மாவட்ட மற்றும் பகுதி அணிகளின் நிர்வாகிகள் மோ.எழில், மு.செல்வகுமார், எஸ்.மணிகண்டன், பூ.ஜெயவேல், ச.ஜெயராம், பு.ஜவஹர்தீன், மு.முருகன், கொடி,பாலா , இரா.மலர்விழி, தங்கம்செல்வராஜ், ஆர்.ரவிமூர்த்தி, ஜி. டி.தினகர், டி.ஏ.பீட்டர், மு. செல்வம், ஜெ.மகேஸ்வரன், தி.சத்தியேந்திரன், இரா.சம்பத்குமார், ஆர்.சரவணன், ஆட்டோ குமார், தி.கோகுலன், வட்ட நிர்வாகிகள் த. வெங்கடேசன், எஸ்.ராஜேந்திரன், பி.பி.நாகராஜ், தி.வழிவிட்டான், சே.உமா, அ.சக்திவேல், எம்.நாராயணமூர்த்தி, ரா.சீனிவாசன், ஜி.குணசேகர், சி.எச். பென்சிலைய்யா, கே.வி. ஜோய், எஸ்.அசிக் அலி, உ.திருவேங்கடம், எல்.பரமன், எ.ஹேமலதா, மடுவை D.அன்பரசு, எம்.பி.சகாதேவன், என். கே.வெங்கடேசன், பொன். அனுமந்தன், ச.அசோக்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

### வாக்காளர் பட்டியல்:

# நாடாளுமன்றத்தை சுத்தப்படுத்த வேண்டும்!

இனிய தமிழ் சொந்தங்களே....!

கடந்த 10 ஆண்டுகளில் ஒன்றிய அரசு இயற்றிய சட்டங்கள் செல்லாது. மறுதேர்தல்நடத்தப்படவேண்டும். தகுதியுள்ளஎந்தஒருகுடிமகனும்வாக்காளர்பட்டியலில்விடுபடாமல்தகுதியற்றநபர்யாரும்சேர்க்கப்படாமல்இருப்பதை உறுதி செய்வதே SIR நோக்கமாகும். தற்போது இது அவசர அவசரமாக தேர்தல் நடக்கும் மாநிலங்களில் செயல்படுத்தப்படுகிறது.

பீகாரில் 41லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டு ஏறத்தாழ 20 லட்சம் வாக்காளர்கள்சேர்க்கப்பட்டதுஎனசொல்லப்படுகிறது. இதுஉண்மையானால்பழைய வாக்காளர் பட்டியல் தவறாக இருந்திருக்கிறது என்பது உண்மையல்லவா? அப்படி என்றால் கடந்த பத்தாண்டுகளாக ஒன்றிய அரசை ஆளுகின்ற கட்சி தவறானவாக்காளர்பட்டியல்மூலம்தானேபதவிக்குவந்திருக்கிறது. ஆகவே அவர்கள்வெற்றிதவறானதுஎன்றுஆகுறதல்லவா? நேர்மையாகபார்த்தால் அவர்கள் கடந்த 10 ஆண்டுகளில் இயற்றிய சட்டங்கள் எல்லாமே சட்டவிரோதமானது என்றுதானே சொல்ல வேண்டும்.

ஆகவேநாடுபூராவும்ஒரேநேரத்தில்வாக்காளர்பட்டியல்சரிபார்க்கப்பட்டு... மறுபடி தேர்தல் நடத்தப்பட்டு நாடாளுமன்றத்தை சுத்தப்படுத்த வேண்டும் அல்லவா? மாநிலத்தேர்தல்களுக்காகமட்டும்ஆனதல்லவாக்காளர்பட்டியல் திருத்தம். ஆகவே நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டு மறுபடி வாக்காளர் பட்டியலை திருத்திவிட்டு தேர்தல் நடத்த வேண்டாமா? இதற்கான பதிலை நீதி மன்றங்கள்தான்மக்களுக்குதெரிவிக்க வேண்டும்.

**வி.சி.குகநாதன்**
திரைப்பட இயக்குநர்





வேளச்சேரி 177வது வார்டு மாமன்ற உறுப்பினரும், கழக தேர்தல் பணிக்குழு செயலாளருமான வேளச்சேரி பெ.மணிமாறன் தலைமையில் ஏரியா சபை கூட்டம் நியூ காலனி அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு ஏரியா சபை உறுப்பினர்கள், அரசு துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ஆசிய கேம்ஸ் – 2025–ல் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ள

# எட்வினா ஜேசன் மென்மேலும் பதக்கங்கள் தேடிட வாழ்த்துகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக்.30-

Asian Youth Games 2025-இல் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ள எட்வினா ஜேசன் அவர்களை பாராட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**நெல்லை மகள் எட்வினா ஜேசன் இன்னும் நெடுந்தூரம் ஓடி, மென்மேலும் பதக்கங்களைத் தேடிட வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் (எஸ்.ஐ.ஆர்.) என்பது


# பா.ஜ.க.வுக்கு சாதகமாகத் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படும் சதி!

## ‘தினகரன் நாளேடு’ தலையங்கத்தில் கருத்து!

சென்னை, அக்.30-

‘தினகரன்’ நாளேடு நேற்று ‘எஸ்.ஐ.ஆர்.’ என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பது வருமாறு:

பீகார் மாநிலத்தில் வரும் நவம்பர் 6 மற்றும் 11ம் தேதிகளில் இரண்டு கட்டமாக சட்டப்பேரவை தேர்தல் நடக்க உள்ளது. இதை மனதில் கொண்டு பீகார் மாநிலத்தில் எஸ்.ஐ.ஆர். (SIR) எனப்படும் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்த பட்டியலை முதல்கட்டமாக தேர்தல் ஆணையம் வெளியிட்டது. இதில் சுமார் 65 லட்சம் வாக்காளர்கள் வரை அதிரடியாக நீக்கப்பட்டிருந்தனர். இது இந்தியா முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்தச் சூழலில் நாடு முழுவதும் இரண்டாம் கட்டமாக ‘எஸ்ஐஆர்’ பணிகள் தொடங்கப்பட உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.



தினகரன்
அக்டோபர் 29, 2025 புதன்கிழமை

'எஸ்ஐஆர்'... உஷார்

பீகார் மாநிலத்தில் வரும் நவம்பர் 6 மற்றும் 11ம் தேதிகளில் இரண்டு கட்டமாக சட்டப்பேரவை தேர்தல் நடக்க உள்ளது. இதை மனதில் கொண்டு பீகார் மாநிலத்தில் எஸ்ஐஆர் (SIR) எனப்படும் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்த பட்டியலை முதல்கட்டமாக தேர்தல் ஆணையம் வெளியிட்டது. இதில் சுமார் 65 லட்சம் வாக்காளர்கள் வரை அதிரடியாக நீக்கப்பட்டிருந்தனர். இது இந்தியா முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த சூழலில் நாடு முழுவதும் இரண்டாம் கட்டமாக 'எஸ்ஐஆர்' பணிகள் தொடங்கப்பட உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. தமிழ்நாடு, கேரளா, சட்டீஸ்கர், கோவா, குஜராத், மேற்கு வங்கம், மத்திய பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களிலும் 2ம் கட்டமாக 'எஸ்ஐஆர்' பணிகள் துவங்க உள்ளன.

தமிழ்நாட்டில் 'எஸ்ஐஆர்' பணிகளுக்கு ஏற்பாடுகள் தீவிரமடைந்துள்ள நிலையில், வரும் நவ. 4ம் தேதி அனைத்து கட்சிகளையும் அழைத்து ஆலோசனை கூட்டம் நடக்க உள்ளார். தமிழ்நாட்டை

தமிழ்நாடு, கேரளா, சட்டீஸ்கர், கோவா, குஜராத், மேற்கு வங்கம், மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களிலும் 2ம் கட்டமாக ‘எஸ்.ஐ.ஆர்.’ பணிகள் துவங்க உள்ளன. தமிழ்நாட்டில் ‘எஸ்.ஐ.ஆர்.’ பணிகளுக்கு ஏற்பாடுகள் தீவிரமடைந்துள்ள நிலையில், வரும் நவ. 4ம் தேதி அனைத்து கட்சிகளையும் அழைத்து ஆலோசனை கூட்டம் நடத்த உள்ளார். தமிழ்நாட்டை பொறுத்தவரை தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க., நா.த.க., மக்கள் நீதி மய்யம் உள்ளிட்ட பல கட்சிகள் ‘எஸ்ஐஆர்’ பணிகளுக்கு கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளன. அதேநேரம் அ.தி.மு.க. இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளது. இதற்கு தமிழக மக்கள் தரப்பிலும், வலைத்தளங்களிலும் கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ் தள பதிவில், “தேர்தலுக்கு மிக நெருக்கத்தில், அதுவும் பருவமழை காலமான நவம்பர், டிசம்பர் மாதங்களில் ‘எஸ்.ஐ.ஆர்.’ பணிகளை மேற்கொள்வது நடைமுறைச் சவால்கள் நிறைந்தது. அவசரகதியில் செய்யப்படும் இந்த ‘எஸ்.ஐ.ஆர்.’ நடவடிக்கை மக்களின் வாக்குரிமையைப் பறித்து, பாஜவுக்கு சாதகமாகத் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படும் சதியாக அமைந்துள்ளது” என குறிப்பிட்டுள்ளார். ‘சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் என்பது தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலை சீர்குலைக்கும் முயற்சி’ என விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் உள்ளிட்ட தலைவர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

ஏற்கனவே, பீகார் மாநிலத்தில் நடந்த ‘எஸ்.ஐ.ஆர்.’ பணிகளில் நீக்கப்பட்டவர்களில் 22 லட்சம் பேர் இறந்துவிட்டதாகவும், 35 லட்சம் பேர் நிரந்தரமாக வேறு மாநிலங்களுக்கு இடம்பெயர்ந்துவிட்டதாகவும், 7 லட்சம் பேர் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் வாக்காளர்களாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும், 1.2 லட்சம் பேர் இன்னும் தங்கள் படிவங்களை சமர்ப்பிக்கவில்லை என தேர்தல் ஆணையம் தெரிவித்தது. இதனை எதிர்த்து எதிர்க்கட்சிகள் உச்ச நீதிமன்றத்தில் பல்வேறு மனுக்களை அளித்திருந்தன. இதுதொடர்பாக விசாரணை நடத்திய உச்ச நீதிமன்றம் நீக்கப்பட்டவர்களின் பெயர் பட்டியலை வெளியிடுமாறு உத்தரவிட்டிருந்தது.

இதற்கு பதிலளித்த தேர்தல் ஆணையம், நீக்கப்பட்ட 65 லட்சம் வாக்காளர்களில் 21 லட்சம் பேர் சேர்க்கப்பட்டிருப்பதாகவும், 3.66 லட்சம் பேர் நீக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்திருந்தது. இதன்படி, பீகாரில் மொத்தமாக 47 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். தங்களுக்கு சாதகமாக வாக்களிப்பவர்களை தக்க வைத்தும், எதிர்த்து வாக்களிப்பவர்களை இனம் கண்டறிந்து நீக்குவதற்கான பா.ஜ. சதி இது என்று குற்றச்சாட்டு, தொடர்ந்து வலுவாகவே வைக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் இந்த ‘எஸ்.ஐ.ஆர்.’, உஷாராகவே கவனிக்கப்பட வேண்டியது என்ற எதிர்க்கட்சிகளின் வாதத்தை புறம்தள்ள முடியாது. தேர்தல் ஆணையம் இதுதொடர்பாக சரியான விளக்கங்களை அளிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இவ்வாறு ‘தினகரன்’ நாளேடு தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.77, கே.பி.பார்க் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு வளாகத்தில் நடைபெற்று வரும் மகளிருக்கான தையல் மற்றும் அழகுக்கலை பயிற்சி வகுப்பினைப் பார்வையிட்டு, அங்கு அளிக்கப்படும் பயிற்சிகள் குறித்துக் கேட்டறிந்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சென்னை தீனன்
### அக்டோபர் 30 (1977)



**சென்னை, சைதாப்பேட்டை, முனியப்பிள்ளை சத்திரத்தைச் சேர்ந்த இவர், இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு தீவிரமாகப் பணியாற்றியவர்.**

**1977ஆம் ஆண்டு அக்டோபர் 30ஆம் நாள் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தலைமைக் கழகம் அறிவித்ததற்கிணங்க, சென்னையில் நடைபெற்ற போராட்டத்தில் கறுப்புக் கொடி ஏந்தி களம் கண்டபோது, அன்றைய ஆட்சியாளரின் காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலியானார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**